# முதல்வரிடம் மாநில திட்டக்குழு அறிக்கை ...

## முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாடு முழுவதும் ஒருங்கிணைந்த திறன் பயிற்சியினை அளித்திட ஊரகப் பகுதிகளில் உள்ள கல்வி நிறுவனங்களின் மின்னணு கட்டமைப்பை மேம்படுத்துதல், மாணவர்களுக்கான மானியம், பயிற்றுனர்களின் திறன் இணைய வழி அட்டவணைப்படுத்துதலை (Cloud based platform for Schedule) மேம்படுத்துதல் தொடர்பான பரிந்துரைகளையும் மதிப்பீட்டாய்வு அறிக்கை வழங்கியுள்ளது.

**3. தமிழ்நாட்டில் புத்தொழில் துவக்கத்திற்கான சுற்றுச்சூழல் அமைப்பு: வாய்ப்புகள் மற்றும் சவால்கள்**

தமிழ்நாடு 2030ஆம் ஆண்டுக்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை அடைவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதன் அடித்தளமாக புத்தொழில்களின் வளர்ச்சிக்கான சுற்றுச்சூழல் அமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. நமது மாநிலம் தேசிய அளவில் புத்தொழில் வளர்ச்சியில் மூன்றாவது இடத்தில் உள்ளது. மேலும், புத்தொழிலின் வளர்ச்சிக்கென விரிவான புதுமை கொள்கைகளுடன் 12 முக்கிய துறை வாரியான கொள்கைகளின் வாயிலாக, செயற்கை நுண்ணறிவு, மின் வாகன உற்பத்தி மற்றும் உயரிய தொழில்நுட்பவியல், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் போன்ற துறைகளில் புத்தொழில் துவக்கத்திற்கான முக்கிய வழிவகைகள் செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், உள்கட்டமைப்பு, மனித மூலதனம், புதிய தொழில் முனைவோர்களை உருவாக்குதல் மற்றும் அரசுகல்வி கூட்டாண்மைகள் மூலம் வழிகாட்டுதல் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் புத்தொழில் வளர்ச்சிக்கான தனித்துவமான கொள்கையானது கேரளா, குஜராத், கர்நாடகா, ஒடிசா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களின் கொள்கைகளை காட்டிலும் விரிவானது. தமிழ்நாடு அரசின் முக்கியக் கொள்கையான சமநிகர் வளர்ச்சியினை உறுதி செய்யும் வகையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்கள், திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய சமமான தொழில் வளர்ச்சிக்கு வலுவான முக்கியத்துவம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புத்தொழில் நிறுவனர்களில் பெரும்பாலும் அரசு உயர்கல்வி நிறுவனங்களில் படித்த நடுத்தர வயது பொறியாளர்கள் மிகுதி, அதிலும், பெண்கள் ஆண்களை விட இளைய வயதில் புத்தொழில்களை தொடங்குபவர்களாக விளங்குகின்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தொழில் வளர் காப்பகங்கள் பல தனியார் மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களாலும் மற்றும் அரசின் நிதி ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டே நடத்தப்படுகின்றன. ஆதரவுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு, நிதியுதவிக்கான அணுகல் ஆகியவை முக்கிய சவால்களாக விளங்குகிறது. துறை ஏற்றத்தாழ்வுகள் (sectoral challenges) மற்றும் நிலைத்தன்மையை அளவிடுதல் ஆகியவையும் முக்கிய சவால்களாக உள்ளன.

தமிழ்நாட்டில் புத்தொழில்கள் தொடக்கத்திற்கான சுற்றுச்சூழல் அமைப்பு StartupTN என்னும் இயக்கத்தின் மூலம் வேகமாக வளர்ந்துள்ளது. ஆனால், அதன் திறனை முழுமையாக செயல்படுத்த நமது மாநிலம் அதற்கென போதிய விழிப்புணர்வு மற்றும் ஆதரவுத் திட்டங்களுக்கான அணுகலை மேம்படுத்தி நிதி செயல்முறைகளை எளிதாக்க வேண்டும், பாலினம் மற்றும் துறை ரீதியிலான ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்து நீடித்த நிலைத்தன்மை மற்றும் வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். தமிழ்நாட்டில் நிலவும் துறை சார்ந்த திறன்களின் அடிப்படையில் புத்தொழில்கான யுக்திகளை வகுத்தல் மாநிலத்தின் வளர்ச்சிக்கு வழி வகுக்கும்.

**4, தமிழ்நாடு கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டு வசதிக் கொள்கை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகரிய மேம்பாட்டுக் கொள்கை**

தமிழ்நாடு கிராமப்புற மற்றும் நகர்ப்புற வீட்டுவசதிக் கொள்கையானது மாநிலத்தின் கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் நீடித்த அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய மற்றும் மலிவு விலையில் பெறத்தக்க வீட்டு வசதிக்கான அவசரத் தேவையைச் சுட்டிக் காட்டுகிறது. மேலும், பெருகி வரும் குடியிருப்புத் தேவைகளை நிறைவுச் செய்ய சமமான நில விநியோகம், நிதியுதவி மற்றும் தனியார்துறைகளின் ஒத்துழைப்பு ஆகியவற்றின் இன்றியமையாமையை இக்கொள்கை கோடிட்டுக் காட்டுகிறது. இக்கொள்கை, சமூக சமத்துவம் மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றினை நோக்கமாக கொண்டு எளிதில் பெறத்தக்க மற்றும் தரமான வீட்டுவசதியை முன்வைக்கிறது. மேலும், அனைத்து வருமான பிரிவினரும் பெறத்தக்க வீட்டுவசதியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இக்கொள்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கொள்கை, நீடித்த நிலையான கிராம நகர்ப்புற இணைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் விளிம்பு நிலை சமூகங்களுக்கென தனிப்பட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கான முயற்சிகளுக்கும் வழிகாட்டுகிறது.

தமிழ்நாடு ஒருங்கிணைந்த நகரிய மேம்பாட்டுக் கொள்கையானது, அனைத்து நகர்ப்புற வசதிகளுடன் கூடிய நன்கு திட்டமிடப்பட்ட, வளங்குன்றா நகரியங்களை உருவாக்க தனியார் துறை முதலீட்டை ஊக்குவித்தல் மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் தரங்களை உயர்த்துதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கொள்கையானது பணிக்கான பயண தேவையைக் குறைக்கும் வகையிலும், "பணியிடத்திற்கு நடந்து செல்லுதல்" என்ற கருத்தை உள்ளடக்கியதாகவும் இருக்கும். மேலும், குடியிருப்பு, வணிக, கல்வி, சுகாதார வசதிகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளுக்கான உட்கட்டமைப்பு, பயன்பாடுகள், திறந்தவெளி பசுமையிடங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்கும். மேலும், இக்கொள்கை, நகர்ப்புற விரிவாக்கத்தில் ஏற்படும் இடர்களை நீக்குதல், மாசுபாட்டைக் குறைத்தல் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் ஆகிய தொலைநோக்கு பார்வையைக் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் செயலாளர் சஜ்ஜன் சிங் ராசவான் மற்றும் மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் திருமதி எஸ்.சுதா ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டின் மாம்பழ விவசாயிகள் –

# மாம்பழ ஏற்றுமதி மதிப்புக்கூட்டு பொருட்களின் உற்பத்தியை மேம்படுத்துவீர்!

## பிரதமருக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்!

**சென்னை, அக்.16-**

**தமிழ்நாட்டில் மாம்பழ விவசாயிகள் மற்றும் மாம்பழம் பதப்படுத்துவோர் நலன் கருதியும் மாம்பழ ஏற்றுமதி மற்றும் மதிப்புக்கூட்டுப் பொருட்களை உற்பத்தியை மேம்படுத்தும் வகையிலும் தேவையான நடவடிக்கை எடுக்கக்கோரி பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.10.2025 அன்று கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில், 2025-ஆம் ஆண்டின் மாம்பழப் பருவத்தில் மா விவசாயிகள் மற்றும் மாம்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க ஒன்றிய அரசின் தலையீட்டைக் கோரி 24.06.2025 அன்று தாம் எழுதியிருந்த கடிதத்தினை சுட்டிக்காட்டியுள்ளார். அதன் அடிப்படையில், பதப்படுத்தக்கூடிய மாம்பழ வகைகளை பயிரிட்ட விவசாயிகள், மாம்பழம் கொள்முதல் விலையில் ஏற்பட்ட கடும் வீழ்ச்சியாலும், மாம்பழக்கூழ் மிகக் குறைவான அளவில் கொள்முதல் செய்யப்பட்டதாலும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர் என்றும் கடந்த ஆண்டு நடந்தது போலவே இந்தப் பருவத்திலும் மா விவசாயிகளுக்கு நட்டம் ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் தமிழ்நாடு அரசு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டு வருவதன் ஒரு முக்கிய பகுதியாக இக்கடிதத்தை தாம் எழுதுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தனது முந்தைய கடிதத்தில் சுட்டிக்காட்டியிருந்தபடி, இந்தியாவில் விற்கப்படும் மாம்பழ பானத்தில் உள்ள பழக்கூழின் அளவு, இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையத்தின் (FSSAI) விதிமுறைகளைப் பின்பற்றாமல், பேக்கேஜ் செய்யப்பட்ட மாம்பழச் சாறு உற்பத்தி செய்யப்படுகிறது என்றும், பானங்களில் மாம்பழக்கூழ் சேர்க்கப்படுவதில் FSSAI தரநிலைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்வதற்கான வழிமுறைகளைப் பிறப்பிக்குமாறு இந்திய அரசைக் தாம் கேட்டுக்கொண்டதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேலும் இது குறித்த தனது கடிதத்திற்கு இன்னும் நேர்மறையான பதில் ஏதும் கிடைக்கப்பெறவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, மா விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், நம்நாட்டில் இந்த பானத்தை அதிகளவில் பயன்படுத்தும் நுகர்வோரின் நலனைக் கருத்தில் கொண்டும், மாம்பழங்களை அடிப்படையாகக் கொண்ட பான உற்பத்தித் தொழிலில் குறைந்தபட்சம் 18 முதல் 20 சதவீதம் வரை பழக்கூழ் உள்ளடக்கத்தை உறுதி செய்ய அறிவுறுத்தப்பட வேண்டும் என்று தாம் கேட்டுக்கொள்வதாகவும் அதனால் அப்பானத்தின் தரமும் மேம்படும் என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டின் மாம்பழ ஏற்றுமதிக் கொள்கையானது மாம்பழ வகை ஏற்றுமதியை மேம்படுத்துவதிலும், மாம்பழப் பொருட்களை பல்வகைப்படுத்துவதிலும் கவனம் செலுத்துவதாகவும், அதற்குத் தேவையான உள்கட்டமைப்பை உருவாக்குவதன் மூலமும், ஏற்றுமதி தரநிலைகளுக்கு இணங்க செயல்முறைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும் சாத்தியப்படும் என்றும் அத்தகைய நடவடிக்கைகள் மாம்பழங்களுக்கு அதிக மதிப்பைச் சேர்க்கும் அதே வேளையில், மாம்பழக்கூழ் தொழில்களை அதிகமாகச் சார்ந்திருப்பதையும் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே, இந்த முயற்சிகளை மேலும் வலுப்படுத்திட இந்திய அரசின் வணிக அமைச்சகத்தின் கீழ் இயங்கும் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA), ஒருங்கிணைந்த பேக்கிங் செய்யும் வசதிகள், உள்நாட்டு கொள்கலன் கிடங்குகள், குளிரூட்டப்பட்ட துறைமுகங்கள், தரச் சோதனை ஆய்வகங்கள், வாங்குபவர் - விற்பனையாளர் சந்திப்புகளை ஏற்பாடு செய்தல், வெளிநாட்டு வாங்குபவர்களை அடையாளம் காணுதல் மற்றும் ஏற்றுமதி தரநிலைகள் குறித்த திறன் மேம்பாட்டுத் திட்டங்களை நடத்துதல் போன்ற உள்கட்டமைப்புகளை மேம்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டிற்குத் தேவையான ஆதரவை வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தப் பிரச்சினையில் இந்தியப் பிரதமர் அவர்கள் இத்தருணத்தில் தலையிட்டு, மா விவசாயிகளின் நலன்களைப் பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், மேம்பட்ட ஏற்றுமதி மற்றும் மதிப்புக் கூட்டல் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்ய உதவிடுமாறும் தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

# அமைச்சர் கீதாஜீவன் கண்டனம்... முதல் பக்கத் தொடர்ச்சி

மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம், புதுமைப் பெண் போன்ற பொருளாதாரத் தன்னிறைவு திட்டங்களால் பெண்கள் முன்னேறி வருகிறார்கள். அது அதிமுகவுக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் பெண் இனத்தைக் குறிக்கும் வகையில் 'பொண்டாட்டி இலவசம்' என்ற வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். கெட்ட வார்த்தைகளில் திட்டுவதற்குக் கூட பெண் இனத்தைப் பயன்படுத்தும் கேடு கெட்டவர் சி.வி. சண்முகம்.

முதலமைச்சரின் திராவிட மாடல் ஆட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களால் தமிழ்நாட்டுப் பெண்களின் வாழ்க்கைத் தரம், பொருளாதாரம் உயர்ந்துள்ளது, கல்வியில் பெண்களின் பங்களிப்பு அதிகரித்துள்ளது, இடைநிற்றல் குறைந்துள்ளது. தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களின் எண்ணிக்கையில் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையைக் கொண்ட மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது, என்று பல ஆய்வுகள் வந்து கொண்டே இருக்கின்றன.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் காட்டிய வழியில் பெண்களின் முன்னேற்றத்துக்காக முதலமைச்சர் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறார். தமிழ்நாட்டில் பெண்களுக்காக நடைமுறையிலிருக்கும் திட்டங்கள் இந்தியாவின் வேறு எந்த மாநிலங்களிலும் இருப்பதைவிடவும் முன்னோடியானவை, அதனால்தான் இப்போது இந்தியாவில் பல மாநிலங்களில் மகளிருக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**தேர்தலில் தக்க பதிலடி கொடுப்பர்!**

மத்தியப் பிரதேசத்தில் லட்லி பெஹ்னா யோஜனா எனவும் கர்நாடகத்தில் கிரகலட்சுமி என்ற பெயரிலும் மகாராஷ்டிராவில் முதலமைச்சரின் அன்பு சகோதரி என்ற பெயரிலும் ஒடிசாவில் சுபத்ரா யோஜனா என்ற பெயரிலும் மேற்கு வங்காளத்தில் லட்சுமி பந்தர் எனவும் ஜார்கண்ட்டில் மையசம்மன் யோஜனா எனவும் இமாசல பிரதேசத்தில் இந்திரா காந்தி பியாரி எனவும் சத்தீஷ்கரில் மஹ்தாரி வந்தன் யோஜனா எனவும் சிக்கிமில் சிக்கிம் ஆமா யோஜனா எனவும் புதுச்சேரியில் மகளிர் உதவித்தொகை எனவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பெண்களை அவதூறாகப் பேசிய அரசியல்வாதிகள் தங்கள் பதவிகளை இழந்த வரலாறு நிறைய உண்டு. பெண்களை இழிவுபடுத்தி வரும் அதிமுகவுக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் 2026 சட்டப் பேரவைத் தேர்தலில் மக்கள் தக்கப் பதிலடிக் கொடுத்து பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அமைச்சர் கீதாஜீவன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள் -

# வாரிசுதாரர்களான 315 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## நல வாரியத்தலைவர் டாக்டர்.திப்பம்பட்டி. வெ.ஆறுச்சாமி வழங்கினார்!

*பெரம்பலூர், அக்.16-*

*பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியம் சார்பில் நடத்தப்பட்ட. நிகழ்ச்சியில் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் டாக்டர். திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி கலந்து கொண்டு தூய்மைப் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள் மற்றும் வாரிசுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும், தூய்மைப் பணியாளர்கள் உறுப்பினர் அடையாள அட்டைகளையும் வழங்கினார்.*

*இயற்கை மரண உதவி தொகை ரூ.25ஆயிரத்துக்கான காசோலையையும்,1 பயனாளிக்கு திருமண உதவித்தொகை ரூ,5 ஆயிரத்துக்கான காசோலையையும் என ரூ.30ஆயிரம் மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளையும், 313 தூய்மை பணியாளர்களுக்கு உறுப்பினர் அடையாள அட்டைகளையும் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய தலைவர் வழங்கினார்.*

*பின்னர், தூய்மை பணியாளர்களிடம் தேவைகள் மற்றும் இதர கோரிக்கைகள் தொடர்பாக தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தலைவர் அவர்கள் கேட்டறிந்து, தொடர்புடைய துறைகள் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், தமிழக அரசால் நடவடிக்கை எடுக்கக் கூடிய கோரிக்கைகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் பரிந்துரை செய்வதாகவும் தெரிவித்தார்.*

*தூய்மைப் பணியாளர்களுக்கு செயல்படுத்தக் கூடிய அனைத்து திட்டங்களும் முறையாக கிடைத்திடவும், மாதந்தோறும் குறித்த காலத்திற்குள் மாத ஊதியமும், அடிப்படை வசதிகளான கை, கால் உறை, சோப்பு உள்ளிட்டவைகளை பேரூராட்சி செயல் அலுவலர்கள், நகராட்சி ஆணையாளர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் வழங்கிட வேண்டும் எனவும் தெரிவித்தார்.*

*பின்னர் அவர் பேசியதாவது:*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மை பணியாளர்களின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள்*

*அந்த வகையில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு வருடம் தோறும் ரூ.15 கோடி நிதி ஒதுக்கி வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகின்றார்கள். தற்போது தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் 3,20,000 உறுப்பினர்கள் பதிவு செய்து பயன்பெற்று வருகின்றனர்.*

*மேலும், எதிர்வரும் மார்ச் மாதத்திற்குள் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தில் 10 லட்சம் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளார்கள். தற்போது பதிவு செய்துள்ள உறுப்பினர்களைத் தவிர தனியார் மருத்துவமனைகள், தனியார் உணவகங்கள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் அனைவரையும் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியத்தில் சேர்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

*செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும் போது போது ஏற்படும் மரணங்களை தவிர்க்கும் வகையில், ரோபோடிக் என்று அழைக்கக்கூடிய நவீன இயந்திரங்கள் வழங்கப்பட உள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்திற்கு என்னென்ன தேவை என்பதைக் கண்டறிந்து அவற்றையும் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். வாரத்தில் ஒரு நாள் விடுமுறை கேட்டு கோரிக்கை வைத்துள்ளீர்கள், உங்களுக்கு ஊதியத்துடன் கூடிய விடுமுறை வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் அனுமதிபெற்று நடவடிக்கை எடுக்கப்படும்.*

*தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்கள் அல்லது அவர்களது வாரிசுதாரர்கள் வெளிநாடு சென்று படிப்பதற்கு இதுவரை ரூ.15 லட்சம் வழங்கப்பட்டு வந்தது. இதனை ரூ.35 லட்சமாக உயர்த்தி வழங்கவும், விபத்து மரண உதவித்தொகையாக வழங்கப்பட்டு வரும் ரூ.5 லட்சத்தை ரூ.8 லட்சமாக உயர்த்தி வழங்கிட வேண்டியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.*

*இவ்வாறு தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் மு.வடிவேல் பிரபு, தமிழ்நாடு தூய்மை பணியாளர் நல வாரிய மாநில உறுப்பினர் நா.சேகர், மாவட்ட தாட்கோ மேலாளர் க.கவியரசு, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் வி.வாசுதேவன், தாட்கோ திட்டக்குழு உறுப்பினர் மா.அருண் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் மற்றும் தூய்மை பணியாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.*



கோவை மாநகராட்சி – விக்டோரியா ஹால் கூட்ட அரங்கில் மாமன்ற சாதாரணக் கூட்டம் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தலைமையில், ஆணையாளர் மா.சிவகுரு பிரபாகரன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், துணை ஆணையாளர் அ.சுல்தானா, வே.கதிர்வேல் (வடக்கு), இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் (கிழக்கு), ர.தனலட்சுமி (தெற்கு), கே.ஏ.தெய்வயானை தமிழ்மறை (மேற்கு), மீனா லோகு (மத்தியம்), மாலதி நாகராஜ் (கல்வி & பூங்கா), பெ.மாரிசெல்வன் (பொது சுகாதாரம்), வி.பி.முபசீரா (வரிவிதிப்பு & நிதி), சாந்தி முருகன் (பணிகள்), சோமு (எ) சந்தோஷ் (நகரமைப்பு), தலைமைப் பொறியாளர் விஜயகுமார் உள்பட நிலைக்குழு உறுப்பினர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி காஜாமலை நூர் மஹாலில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ. ஆறுச்சாமி தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அடையாள அட்டை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நலவாரிய உறுப்பினர் திருச்சி சேகர், மாமன்ற உறுப்பினர் காஜாமலை விஜி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.